**A**

**CCE RF/RR/
PF/PR**

**ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ,
ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD,
MALLESHWARAM, BENGALURU – 560 003**

**ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ 2025 ರ ಪರೀಕ್ಷೆ - 1**

**MARCH/APRIL 2025 EXAMINATION - 1**

**ಮಾದರಿ ಉತ್ತರಗಳು**

**MODEL ANSWERS**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **CODE NO. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

**(ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ)**
**(Regular Fresh / Regular Repeater / Private Fresh / Private Repeater)**

**ದಿನಾಂಕ : 21. 03. 2025 ]** **[ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100**

**Date : 21. 03. 2025 ]** **[ Max. Marks : 100**

**I.** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுதல் : **6 × 1 = 6**

1. செய்யுளில் இரண்டு சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) அளவடி

(C) நெடிலடி

(D) சிந்தடி

***Ans.* :**

(A) குறளடி

2. செய்யுளைப் பொருளால் அழகுபடப் புனைவது

   (A) சொல்லணி

   (B) பொருளணி

   (C) வேற்றுமை அணி

   (D) பின் வருநிலை அணி

   ***Ans.* :**

   (B) பொருளணி

3. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

   (A) வஞ்சி (B) உழிஞை

   (C) காஞ்சி (D) வெட்சி

   ***Ans.* :**

   (D) வெட்சி

4. வகுப்பு சிரித்தது

   (A) பொருளாகுப் பெயர் (B) இடவாகுப் பெயர்

   (C) காலவாகுப் பெயர் (D) சினையாகுப் பெயர்

   ***Ans.* :**

   (B) இடவாகுப் பெயர்

5. நனியுண்டு நனியுண்டு என்பது

   (A) அடுக்குத் தொடர் (B) இரட்டைக் கிளவி

   (C) அசை (D) விளி

   ***Ans.* :**

   (A) அடுக்குத் தொடர்

6. ஏரோட்டுவதைவிடச் சிறந்தது இது

   (A) விதைத்தல் (B) எருவிடுதல்

   (C) களை எடுத்தல் (D) கதிர் அறுத்தல்

   ***Ans.* :**

   (B) எருவிடுதல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக : 4 × 1 = 4**

7. பூமியோடு பெயர்த்தெடுத்தான் : இராவணன்

   புல்லால் பர்ணசாலை அமைத்தான் : ..........................

   ***Ans.* :**

   இலக்குவன்

8. கம்பராமாயணத்தின் ஆசிரியர் : கம்பர்.

   பம்பபாரதத்தின் ஆசிரியர் : .......................... .

   ***Ans.* :**

   பம்பன்

9. மற்ற யந்திரங்கள் : இரும்பால் ஆனவை

   மனித யந்திரங்கள் : .......................... .

   ***Ans.* :**

   மூளையால் ஆனவை

10. உடல் : மண்ணுக்கு

    உயிர் கொண்ட : .......................... .

    ***Ans.* :**

    குறிக்கோளுக்கு

**III. ஒரு தொடரில் விடை தருதல் :** **7 × 1 = 7**

11. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

***Ans.* :**

என்னிடம் எதுவும் இல்லை என்ற சோம்பி இருப்பவரைக் கண்டு

12. இளையான்குடி மாறர் பெரிய இறைகூடையில் எதனைக் கொணர்ந்தார் ?

***Ans.* :**

முளை நெல்லை வாரியெடுத்து இறை கூடையில் கொணர்ந்தார்

13. பாணன் தான் கொண்டுவந்த பரிசுப் பொருள் பற்றி முதலில் கூறிய சொல் யாது ?

***Ans.* :**

களபம், மாதங்கம், வேழம்

14. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன ?

***Ans.* :**

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்

15. எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பவர் யார் ?

***Ans.* :**

உணர்வு பெருகியோர்.

16. C.F.C என்றால் என்ன ?

***Ans.* :**

குளோரோ ஃப்ளோரோ கார்பன்.

17. தூறு என்றால் என்ன ?

***Ans.* :**

தூறு என்றால் புதர்.

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருதல் : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

***Ans.* :**

இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ என்று பிறர் பேசும்படி செய்வது. 2

19. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?

***Ans.* :**

உன்னை விரும்பாத ஒருத்தியை நீ வலிந்து தீண்டினால் சுக்கு நூறாகத் தலை வெடித்துச் சிதறி இறப்பாய் ! 2

20. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

***Ans.* :**

ஆலைகள் இயக்க

சாலைகள் அமைக்க

அனல்மின் நிலையம் இயக்க 2

21. 'நீதிசாரம்' என்ற நூல் பற்றி எழுதுக.

***Ans.* :**

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல். இது ஒரு ஓலைச்சுவடி அவற்றில் மரம் வளர்த்தால் நரகம் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது. 2

22. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

***Ans.* :**

இறந்த காலத்தில் கட்டப்பட்டது தான் தாஜ்மஹால். ஆனால் அந்த இறந்தகாலம் தாஜ்மஹாலின் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. 1

திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன் தான் ஆனால் இன்னும் அவன் இறந்துவிடவில்லை. 1

23. வெளவால் குகைகள் எவ்வாறு காட்சி அளிக்கின்றன ?

***Ans.* :**

வெளவால்கள் தொங்கிக் கிடக்க இயற்கையிலேயே செதுக்கியது போன்று அமைந்த குகைகள் படிவிற் பாறைகளால் ஆனவை. அவற்றில் சைகாஸ் மரங்கள் தொங்கிக் கொண்டிருக்கும். 2

24. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

***Ans.* :**

தச்சர்கள், கொல்லர்கள், கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் நகரத்தில் அவர்களுக்கு கிடைக்கும் கூலித்தொகை கிராமத்தில் கிடைக்காது. 1

கொடுக்க கட்டாது. 1

25. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

***Ans.* :**

கால் இல்லாத கள்வன் 1

கால் உள்ளவனைப் பிடித்தான் தலையில்லாதவன் அதைப் பார்த்து கலகலவென்று சிரித்தான் - அவன் யார்?

பாம்பு, தவளை, நண்டு 1

26. 'அடி என்றால் என்ன'? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

***Ans.* :**

தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது அடி 1

குறளடி - 2 சீர்

சிந்தடி - 3 சீர்

அளவடி - 4 சீர்

நெடிலடி - 5 சீர்

கழிநெடிவடி - 6 சீர் மேற்பட்டது 1

27. வெண்பாவின் இலக்கணம் யாது ?

***Ans.* :**

ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்டு சீர்களாகவும் வரும் 1

செப்பலோசை உடையதாய் வரும் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டால் முடிவது. 1

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுதல் : 4 × 3 = 12**

28. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

***Ans.* :**

i) பகலில் விதைத்த முளை நெல்லை இறைக் கூடையில் வாரி எடுத்து வந்து இளையான் குடிமாறன் தன் மனைவிடம் கொடுத்தார். 1

ii) நெல் முளையில் படிந்திருந்த சேற்றை நீரினாலே கழுவி பக்குவப்படுத்தி, அடுப்பில் எரிக்க விறகில்லை என்றுகூற நாயனார் மனையின் கூரையை விறகின் பொருட்டு அறுத்து தள்ளினார். 1

iii) அரிசியை குற்றி எடுத்து. உலையிலே இட்டு அமுது செய்தார். கொல்லையில் பருவமுறா சிறிய இலைக்கறியை பறித்து வந்தார் அதை கறிக்காக சமைத்து சிவனடியார்க்கு அமுது செய்வித்தார். 1

29. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

***Ans.* :**

வடதுருவம், தென்துருவம் இங்கே எல்லாம்

i) இருக்கிற பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும் 1

ii) கடல் மட்டம் உயரும் பல தீவுகள் மூழ்கும் 1

iii) உலகம் பூரா கடல் ஓரப்பகுதிகள் மூழ்கும் 1

30. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

***Ans.* :**

i) உடல் மண்ணுக்கு உயிர் கொண்ட குறிக்கோளுக்கு 1

ii) பொதுநல உணர்வோடு பிறர்கென வாழ்பவர். 1

iii) தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம் தாயுள்ளம் என பாராட்டுகிறார். 1

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும்? அதன் விளைவு எது ?

***Ans.* :**

பதினேழாவது வயதிலிருந்து

i) இருபத்து நான்காவது வயதிற்குள் உனது திசை எதுவென்பதை தீர்மானிக்க வேண்டும் 1

ii) தீர்மானிக்காவிட்டால் நீ பாறையில் மோதிய பந்தாய்த் திரும்பிவர வேண்டியிருக்கும் 1

iii) முப்பது வயதில் முதுமை வந்துவிடும். 1

**VI. குறிப்பு வரைதல் : 2 × 3 = 6**

32. திருக்குறள்.

***Ans.* :**

திருக்குறள் - திருவள்ளுவர்.

i) 1330 - குறள்

133 - அதிகாரம் 1

ii) ஒவ்வொரு அதிகாரத்திற்கு 10 குறள் 1

iii) அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவு 1

33. மகாகவி பாரதியார்.

***Ans.* :**

i) பாரதியார் இயற்பெயர் : சுப்பிரமணியன் பெண் விடுதலைக்கு வித்திட்டவர். 1

ii) பிறந்த இடம் : எட்டயபுரம் திருநெல்வேலி மாவட்டம் 1

iii) சிறப்பு பெயர் : தேசிய கவி, மகாகவி முண்டாசு கவி 1

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

34. தற்குறிப் பேற்ற அணி.

***Ans.* :**

இயற்கையாக நடக்கின்ற நிகழ்ச்சியின்

i) மீது கவிஞன் தன்னுடைய எண்ணத்தை ஏற்றி கூறுவது. 1

ii) சான்று : கோவலன் கண்ணகி மதுரை நகருக்கு வர பாண்டியன் அரண்மனை வாயில் மதில் மேல் இருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன 1

iii) இளங்கோவடிகள் இயற்கையாக நடக்கின்ற நிகழ்ச்சியின் மீது ஏற்றிக்கூறி இருக்கிறார். 1

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குதல் : 3 × 3 = 9**

35. ''அறத்தான் வருவதே இன்பம்''

***Ans.* :**

இடம் : திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் 1

பொருள் : அறநெறியில் பெறும் இன்பமே இன்பம். அறமல்லாப் பிறவழியில் பெறுவது துன்பமாகும். 2

36. சரி ... பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?

***Ans.* :**

இடம் : சுற்றுச்சூழல் 1

பொருள் : பனிகட்டிகள் உருகுவதால் கடல் மட்டம் 1 மீட்டர் உயரும் அதனால் வங்கதேசத்துலே 4-முதல் 8-கோடி மக்கள் வேற இடம் தேட வேண்டியிருக்கு

இயற்கை சமநிலை கெடுவதால். 2

37. பாவம் : கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்.

***Ans.* :**

இடம் : ஒரு செய்தி என்ற உரைநடை 1

பொருள் : போர்க்களத்துச் சவங்கள் போல விழுந்தது விழுந்தபடி கிடந்தது மூச்சுபிரிதல் ஒன்றே அவர்களை வித்தியாசப்படுத்துகிறது. எந்த விநாடியிலும் அந்தத் தீப்பெட்டி ஆபிஸ் பஸ்கள் வந்து இவர்களை உலுக்கி எழுப்பலாம். 2

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குதல் : 1 × 3 = 3**

38. ''ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்''.

*அல்லது*

''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''.

***Ans.* :**

ஞாயிற்றைக் கையால் மறைப்பவர் இல்லை. 1

அறிவு ஆற்றல் உடையவரைப பாசிப் போன்ற அடாத சில சொற்களை அவர் மேல் இட்டு அவரது புகழை மறைத்து ஒளித்து விட முடியாது. 2

அல்லது

***Ans.* :**

கண்ணால் காண்பதெல்லாம் உண்மை அல்ல. எந்த செயலையும் தீர ஆய்து அறிவதே உண்மை ஆகும். 2

மின்னு கின்றவை எல்லாம் பொன் என்று கூற முடியாது 1

**X. அடிபிறழாமல் எழுதுதல் :** **1 × 4 = 4**

39. சோதியாய்த் தோன்றும் ..... எனத் தொடங்கும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

இனிமைத் தமிழ் ..... எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடல்.

***Ans.* :**

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் 2
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே.
தீது இலா நன்மைத் திருவருள் குன்றே 2
திருப் பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர்வகை அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே

- மாணிக்க வாசகர்

அல்லது

***Ans.* :**

இனிமைத் தமிழ் மொழி எமது எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது 2
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு!

தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள் 2
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்

- பாரதிதாசன்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருதல் : 2 × 4 = 8**

40. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள்' கைவண்ணம் இங்குக் கண்டோம் என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.

***Ans.* :**

சேதுப்பிள்ளையின் விருப்பமான

i) பண்டங்களில் ஒன்று தயிர் வடை 1

ii) மாணவியர் தயாரித்து பரிமாறப் பெற்றன 1

iii) இந்தித்துரைத் தலைவர் அவர்கள் மிகச்சுவையாக உள்ளது இது எந்த விடுதியில் தயாரிக்கப்பட்டதோ என்று பாராட்டினார் 1

iv) மாணவியர் பக்கம் பார்க்க இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம் என்ற கவித்தொடரை நினைவூட்டினார் 1

41. இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமான் கூறியவற்றை எழுதுக.

*அல்லது*

தீப்பெட்டி ஆபிஸிற்குக் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி ராஜநாராயணன் கூறியன யாவை ?

***Ans.* :**

தேவமகள் போன்ற சீதையை, அலையும்

i) அலைகளை உடைய கண்ணீர் ஆகிய கடலின் இடையே கண்டேன் 1

ii) அரக்கியர் சீதையை நெருங்கிக் காத்தனர். 1

iii) இரக்கம் என்னும் ஒரு பண்பு பெண்ணின் வடிவமான சீதை 1

iv) சிறைக்குள்ளே சிக்கிக் கொண்டதைப் போன்ற தன்மையைப் பெற்றவளாய் இருந்தாள் சீதை 1

அல்லது

***Ans.* :**

i) பெண் குழந்தைகள் தீப்பெட்டி ஆபிஸிற்க்கு தூக்கு சட்டியுடன் புற்றுக்குள் எறும்புகள் நுழைவது போல வரிசையாக பஸ்சுக்குள் போய் அடைவார்கள் 1

ii) தீப்பெட்டிக்குள்ளே குச்சிகள் அடுக்குகிறதைப் போல அந்த பிள்ளைகளை பஸ்சுக்குள் அடைந்தனர் 1

iii) மாலையில் வீடு திரும்பும் போது காலி தூக்குச் சட்டியுடன் கரும்பைத் தின்று சக்கையைத் துப்புவது போல வெளியே தள்ளப்பட்டனர் பஸ்ஸில் இருந்து. 1

iv) போர்களத்துச் சவங்களைப் போல விழுந்து கிடந்தனர் முச்சுப்பிரிதல் ஒன்றே அவர்களை வித்தியாசப்படுத்துகிறது. பஸ்கள் வந்து உரத்த ஒலியில் இவர்களை உலுக்கி எழுப்பலாம். 1

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுதல் : 1 × 4 = 4**

42. பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்
ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்
சொன்ன சொல் கேட்பாரும் என் மக்களே
காற்றை உண்பாரும் என் மக்களே.

*அல்லது*

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

***Ans.* :**

பொன்னை தோண்டி எடுப்பவர்க்கு

i) அன்னம் கிடைப்பதில்லை 1

ii) ஆடையை நெய்பவர்க்கு உடுத்த ஆடை இல்லை 1

iii) சொன்ன சொல் கேட்பவர்கள் என் மக்கள் 1

iv) உணவு கிடைக்காமல் காற்றை மட்டும் சுவாசிப்பவர் என் மக்கள். 1

அல்லது

***Ans.* :**

i) கல்வி கற்பது தீமை என்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டனர். 2

ii) வீட்டுக்குள்ளே பெண்ணை அடிமையாக வைத்திருக்கும் விந்தையான மனிதர்கள் தலை குனிந்தனர். 2

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் : 1 × 4 = 4**

மனித வாழ்வுக்குத் தேவையானவற்றை அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துத் தொகுத்துள்ளது வள்ளுவம். காதல் இன்பம் இன்றேல் மனித வாழ்வு இல்லை என்பது வள்ளுவத்தின் தத்துவம். ஆனால் அதே நேரத்தில் காதல் இன்பமே மனித வாழ்வா ! என்றால் இல்லை என்றே வள்ளுவம் ஐயத்திற்கு இடமில்லாமல் விடையளிக்கும். காதல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதவாழ்வில் நிலைத்த இன்பம், உலகியல் இன்பம், அடிப்படை இன்பம் அறிவியல் இன்பம் பெறவேண்டும். அதுவே முழுமை பெற்ற நிறைந்த வாழ்வென்று வள்ளுவம் வழிகாட்டும்.

**வினாக்கள் :**

43. a) மனித வாழ்வுக்குத் தேவையை கூறுவது எது ? 2

b) முழுமை பெற்ற நிறைந்த வாழ்வு எது ? 2

***Ans.* :**

a) அறம் பொருள், இன்பம் மனித வாழ்வுக்கு தேவை. 2

b) நிலைத்த இன்பம், உலகியல் இன்பம் அடிப்படை இன்பம், அறிவியல் இன்பம் பெற வேண்டும். 2

**XIV. மடல் எழுதுதல் :** **1 × 5 = 5**

44. உன் பள்ளியில் புத்தக கண்காட்சிக்கு சென்றதை நினைவு கூர்ந்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வசிக்கும் பகுதியில் சாலையை சீரமைத்து கொடுக்க நகர ஆணையர்க்கு விண்ணப்பம் எழுதுக.

***Ans.* :**

நாள் : 1
இடம் :

அன்புள்ள :

மதிப்பிற்குரிய :

கடிதப் பொருள் : 2

இங்வணம்

எழுதுவோர் பெயர் 1

பெறுவோர் முகவரி : 1

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுல் :** **1 × 5 = 5**

45. ''இன்றைய வாழ்வில்'' கைபேசியின் நன்மை தீமைகளை தொகுத்து எழுதுக.

*அல்லது*

''சுற்றுப்புறத் தூய்மை''

***Ans.* :**

— தலைப்புக்கு ஏற்ற முன்னுரை. 1

— தலைப்புக்கு ஏற்ற பக்க தலைப்புகள். 1

— கட்டுரையின் நோக்கம், நிறைவுறும். வகையில் வலியுறுத்தல். 2

— முடிவுரை 1